# இலங்கையின் அந்நியச் செலாவணி விகிதங்களின் போக்கு; (1978 - 1990)

—கா. கந்தையா

''அந்நியச் செலாவணி என்ற சொற்றொடர் ஒரு நாட்டுச் செலாவணி நாணயத்திற்கு மற்றொரு நாட்டு நாணயம் மாற்றப்படும் முறைகள், அவ்வாறு மாற்றுவதற்குரிய காரணங்கள், எவ்வடிவத்தில் இம்மாறுதல்கள் நடைபெறுகின்றன என்ற விடயங்களை உள்ளடக்கியதாகவுள்ளது. இக்கட்டுரையானது அந்நியச் செலாவணி விகிதம் பற்றிய பல்வேறு எண்ணக்கருக்களை விளக்கி, இலங்கையில் இவ்விகிதங்கள் எவ்வாறு அமைந்து உள்ளன என்பதனை விளக்குவதனையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்நியச் செலாவணி விகிதம் பற்றி பல்வேறுபட்ட எண்ணக்கருக்கள் உள்ளன. இவ் வேறுபட்ட எண்ணக்கருக்கள் பற்றி தெளிவான விளக்கங்கள் அவசியமானவை. ஏனெனில் ஒவ்வொரு விதங்களும் வெவ்வேறான கருத்துக்களை கவனத்தில் கொண்டு கணிக்கப்படுவதனால் இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு திசையில் அசைவுறக்கூடும். இவ்வாறான போக்குகளினால் நாட்டின் அந்நியச் செலாவணி விதங்களின் போக்கு பற்றிய மதிபபீடு ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தக்கூடும். அந்நியச்செலாவணி விதங்களில் பொதுவாக இக்கட்டுரை பெயரளவு நாணய மாற்று வீதம், நிறையளிக்கப்பட்ட பெயரளவு நாணய மாற்று விதம், நிறையளிக்கப்பட்ட மெய் நாணயமாற்று விதம், மெய்பயனுறுதி நாணய மாற்றுவிதம் என்பவை பற்றிய விளக்கங்களையே கவனத்தில் கொண்டுள்ளது.

அந்நியச் செலாவணி விதம் என்பது பற்றி பல்வேறுவகையான விளக்கங்கள் உண்டு. பொதுவாக இதனை ஒரு நாட்டு நாணயத்தின் விலையினை இன்னொரு நாட்டு நாணயத்தின் பெறுமதியில் குறிப்பிடப்படுவது என வரைவிலக்கணப்படுத்தலாம். அதாவது இரு வேறுபட்ட நாணயங்களின் ஒப்பீட்டு ரீதியான விலையாகும். இந்த வீதத்தினை உள்நாட்டு நாணயத்தின் ஒரு அலகு நாணயத்திற்கு வேறு ஒரு நாட்டின் எத்தனை நாணய அலகுகள் சமம் என்பதை குறிப்பிடுவதாகும். மாறாக வேறொரு நாட்டின் ஒரு நாணய அலகிற்கு எத்தனை உள்நாட்டு தாணய அலகுகள் சமம் எனவும் குறிப்பிடலாம். இவ்வாறான விகிதங்கள் இருபக்க செலாவணி மாற்று விகிதங்களாகவும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் வீதங்களாகவும் காணப்படும். தனியாக ஒருநாடு இருபக்க பெயரளவு

---

*இவர் பொருளியல்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கையின் பணத்திற்காக கேள்விபற்றி மெய்ச்சான்று ரீதியான ஆய்வினைச் செய்துள்ளார் அத்துடன் இலங்கையின் பணநிரம்பல் விலைமட்டம் பணவீக்கம் ஆகியவற்றிற்கிடையேயுள்ள தொடர்பினை மதிப்பிட்டு ஓர் ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.*

நாணய மாற்று வீதம் என்பதனைப் பல நாடுகளுடன் வைத்துக் கொள்ள
லாம். இவ்வாறான நிலையில் நாடுகளுக்கிடையேயுள்ள பெயரளவு நாணய
மாற்றுவீத அசைவுகள் வெவ்வேறு திசையிலும் வெவ்வேறு அளவுகளிலும்
காணப்படலாம். ஒரு நாட்டின் நாணய மாற்று வீதத்தை சுருக்கமான
முறையில் தெளிவாகப் பிரதிபலிப்பதாகவும் வர்த்தக முக்கியத்துவத்தை
யும், குறிப்பிட்ட வெளிநாட்டுநிதி நாணய ஒட்ட நிலைமைகளையும் நிறை
களாகக் கொண்டு ஒரு நாட்டிற்கும் அதனோடு வர்த்தகத்தில் தொடர்பு
கொண்டுள்ள பிரதான வாத்தகப் பங்காள நாடுகளுக்குமிடையேயுள்ள
மொத்தத் தொடர்புகளைப் பிரதிபலிப்பதாகவே நிறைவேற்றிய செலாவணி
மாற்று வீதம் அமைகின்றது.[1] நிறைவேற்றிய செலாவணி மாற்று வீத
கணிப்பில் வெவ்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன. கணிப்பீடானது
எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதோ அந்த நோக்கத்தை
பிரதிபலிப்பதாக அமையும். ஏற்றுமதி இறக்குமதிக்காக தனித்தனியாகக்
கணிக்கப்படலாம் அல்லது இலாபத்தை அறிவதற்காக தனித்தனியான
பொருட்களுக்கு கணிக்கப்படலாம். அல்லது நாடுகளுக்கிடையே ஏற்றுமதி
யில் உள்ள போட்டி நிலைமைகளை அறியக் கணிக்கப்படலாம். அதேபோன்று
வர்த்தக, கைத்தொழில் உபாயங்களில் அந்நியச் செலாவணி அமைப்பு எத
தகைய பங்களிப்பினைச் செய்துள்ளது என்பதனை அறியவும், இக்கணிப்பீடு
முறை பயன்படுத்தப்படலாம். எனவே ஆய்வாளனின் குறிக்கோள்களை
அடிப்படையாகக் கொண்டே இக்கணிப்பீட்டுமுறையும எநதெந்த பொருள்
களுக்கு அல்லது எவ்வெத் துறைகளுக்கு கணிப்பீடு ! செய்யப்படுதல் என்ப
தும் அமையும்.

உதாரணமாக ஒரு நாட்டின் ஏற்றுமதி இறக்குமதித் துறைகளுக்
காக தனித்தனியான நிறையேற்றிய செலாவணி வீதச் சுட்டெண்களைக்
கணிப்பீடு செய்யவேண்டுமெனின், அந்த நாட்டோடு வர்த்தகத்தில் ஈடு
படும் பிரதான பங்காள நாடுகளை அடையாளம் காணவேண்டும். ஏற்று
மதிக்கான பங்காள நாடுகள் தனியாகவும், இறக்குமதிக்கான பங்காள
நாடுகள் தனியாகவும் வரையறுக்கப்பட்ட பின்பு, நாட்டின் மொத்த ஏற்று
மதியின் விகிதாசார அடிப்படையில் ஒவ்வொரு பங்காள நாடுகளும் எந்த
விகிதத்தினை பெறுகின்றன என்பதை நிறையாகக் கொள்ளவேண்டும். இதே
போன்று இறக்குமதி பங்காள நாடுகளுக்கும் மொத்த இறக்குமதியின் விகி
தாசாரமாக நிறையளிக்கப்படுதல் வேண்டும்.[2]

வர்த்தகப் பங்காள நாடுகளின் நிறையேற்றிய சராசரிப் பணவீக்க
சுட்டெண், குறித்த நாட்டு பணவீக்க சுட்டெண்ணோடு ஒப்பிட்டு ரீதியில்
பெறப்பட்ட விகிதத்தால் நிறையேற்றிய ,பெயரளவான சுட்டெண்ணை
சரிசெய்து பெறப்படுவதே நிறையேற்றிய மெய் அந்நியச் செலாவணி
வீதங்களாகும் அல்லது வர்த்தகப் பங்காள நாடுகளின் நுகர்வோர் சுட்
டெண்ணின் நிறையளித்த சராசரியின் விகிதமாக ஒரு குறித்த நாட்டுச்
சுட்டெண் கணிப்பிடப்பட்டு இந்த விகிதத்தால் மொத்த நிறையளித்த பெயர
ளவான சுட்டெண்ணைப் பிரிக்க வருவதே நிறையளித்த மெய் அந்நியச்
செலாவணி வீதமாகும்.[3]

பயனுறுதி நாணயமற்ற விதம் என்பது ஏற்றுமதிவரி, ‌இறக்குமதி
வரி, தீர்வைகள், ஏற்றுமதி இறக்குமதி என்பவற்றிற்கான மானியங்கள்

என்பனவற்றைக் கவனத்தில் கொண்டே கணிக்கப்படுகின்றன. உதாரணமாக ஒரு நாட்டின் ஏற்றுமதியினை எடுத்துக் கொண்டால் மொத்த ஏற்றுமதித் தீர்வையிலிருந்து ஏற்றுமதிக்கான மானியத்தைக் கழிக்கின்றபோது தேறிய ஏற்றுமதி தீர்வை பெறப்படும் தேறிய ஏற்றுமதித் தீர்வையினை மொத்த ஏற்றுமதிப் பெறுமானத்தின் விகிதமாக கிடைப்பதே செயற்றிறன் வாய்ந்த தேறிய தீர்வை (இறுப்பு) ஆகும். மெய்நிறையளித்த ஏற்றுமதிக்கான அந்நியச் செலாவணிச் சுட்டெண்ணை "1 - செயற்றிறன் வாய்ந்த இறுப்பு" என்பதால் பெருக்கிப் பெறுவதே ஏற்றுமதிக்கான பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விதமாகும் மாறாக இறக்குமதிக்கான பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதத்தினை நிறையளித்த இறக்குமதிச் சுட்டெண்ணை "1 + செயற்றிறன் வாய்ந்த இறுப்புக்கள்" என்பதால் பெருக்கக் கிடைக்கும் பெறுமானமாகும்[4]

இவ்விடத்தில் மெய் நாணய மாற்று வீதம் என்பதனையும் வரையறுத்தல் பொருத்தமானதாக அமையும் பெயரளவு நாணயமாற்று வீதமானது ஒரு அலகு நாணயத்தைக் கொண்டு எத்தனை அலகுகள் வேறொரு நாணயத்தைக் கொள்வனவு செய்ய முடியும் என வரைவிலக்கணம் செய்யப்படும் போது இவ்வரைவிலக்கணமானது ஒரு நாடு எந்தவிதத்தில் மெய்யான பொருட்கள் சேவைகளை இன்னொரு நாட்டோடு மாற்றுதல் செய்து கொள்ளலாம் என்பதற்கு விடையளிக்கவில்லை. அதாவது இரு நாடுகளின் ஒப்பீட்டு ரீதியான விலைமட்டத்தைக் கவனிக்கவில்லை. மெய் நாணய மாற்று விதம் இக்குறைபாட்டை நீக்குகின்றது. கோட்பாட்டு ரீதியாக மெய் நாணய மாற்று வீதத்தை வர்த்தகத்தில் ஈடுபடாத பொருட்களின் சராசரி விலைமட்டத்தை வர்த்தகத்தில் ஈடுபடும் பொருட்களின் சராசரி விலைமட்டத்தால் பிரிப்பதற்குச் சமமானது என வரைவிலக்கணப்படுத்தலாம் புள்ளிவிபர ரீதியாக மெய் நாணயமாற்று வீதமானது பெயரளவு நாணய மாற்று விதத்தை உள்நாட்டு வெளிநாட்டு விலை விகிதாசாரத்தால் பெருக்குவதற்குச் சமமாகும்.[5] புள்ளிவிபர ரீதியான வரைவிலக்கணப்படி ஒரு நாட்டின் பெயரளவான நாணய மாற்று விதம் கூடுகின்றபோது அல்லது உள்நாட்டு விலைமட்டம் அதிகரிக்கின்ற போது மெய் நாணய மாற்று விதம் அதிகரிக்கும் என்பதனைக் கூற முடிகின்றது. எல்லா நாடுகளும் ஒரே மாதிரியான பணவீக்க விகிதங்களைக் கொண்டிருக்குமாயின் பயனுறுதி நாணய மாற்று வீதம் அல்லது பெயரளவு நாணய மாற்று வீதம் என்பதனை மெய் நாணய மாற்று வீதத்திற்குப் பதிலாக உபயோகிக்க முடியும். ஆனால் நடைமுறையில் நாடுகளிடையே பணவீக்க வீதங்கள் வேறுபடுவதால் மெய் நாணய மாற்று வீதக் கணிப்பீடு என்பது அவசியமாகின்றது. குறிப்பாக மெய் நாணய மாற்று வீதக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு நாடுகளுக்கிடையேயுள்ள போட்டித்தன்மையின் மாற்றங்களைக் குறிப்பிட முடியும். இக் கணிப்பீட்டு முறையில் முக்கியமாக விலைமட்டத்துனைக் கணிப்பிடல் கடினமானதாக உள்ளது, ஏனெனில் ஒரு நாட்டின் பொது விலை மட்டம் வர்த்தகத்தில் ஈடுபடாத பொருட்களின் விலை நிலைமைகளை தெளிவாகப் பிரதிபலிப்பதாக இல்லை. இருந்தும் மெய் நாணய மாற்று வீதத்தினை கணிப்பிடுகின்ற போது ஒரு நாட்டின் தேசிய வருமான கணக்கின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளை வர்த்தகத்தில் ஈடுபடும் துறைகளாகவும், ஏனைய துறைகளை வர்த்தகத்தில் ஈடுபடாத துறைகளாகவும் வகைப்படுத்தி வர்த்தகத்தில் ஈடுபடும் பொருட்களின் விலைக்கும் , வர்த்தகத்தில்

ஈடுபடாத பொருட்களின் விலைக்கும் இடையேயுள்ள விகிதமாக மெய் நாணய மாற்று விதச் சுட்டெண் கணிக்கப்படலாம்[6] மெய் நாணய மாற்று விதத்தை பெயரளவு நாணயமாற்று விதத்திலிருந்து வேறுபடுத்தல், பேரினப் பொருளியல் கொள்கை வகுத்தலின் அடிப்படையில் முக்கியமாக அமைகின்றது.

## II

இலங்கையின் அந்நியச் செலாவணி முறையில் 1970 களிலிருந்து காலத்திற்குக்காலம் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால் 1977 நவம்பருக்குப் பின்பாக இலங்கை ரூபா ஏனைய நாட்டு நாணயங்களோடு மிதக்கவிடப்பட்டதோடு இலங்கையின் அந்நியச் செலாவணிக் கொள்கையில ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமானதெனலாம். இக்காலப் பகுதியை இலங்கையின் அந்நியச் செலாவணிக் கொள்கையின் சுதந்திரமான மிதக்கவிடப்பட்ட காலப் பகுதி என சிலர் வரையறுத்துள்ளனர்[7]. இலங்கை ரூபாவின் பெறுமதியானது முன்னைய காலப் பகுதிகளோடு ஒப்பிடுகின்றபோது குறைவடைந்து வந்ததை நாம் அவதானிக்க முடிகின்றது இது இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளிடையே இருந்து வருகின்ற ஒரு பொதுவான பண்பாகவே காணப்படுகின்றது கீழேயுள்ள அட்டவணையானது இலங்கைக்கும் பிரதான ஏனைய நாடுகளுக்குமிடையேயுள்ள பெய

அட்டவணை 1

**இலங்கையின் அந்நியச் செலாவணிப் பெயரளவுச் சுட்டெண்கள்**

1 78 - 100

| வருடம் | சிறப்பு எடுப்பு உரிமை | ஐக்கிய அமெ. டொலர் | ஐக்கிய இரா. பவுண்ட் | ஜப்பான் யென் | டியச் மாக் |
|---|---|---|---|---|---|
| 1978 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1979 | 101 | 100 | 109 | 80 | 105 |
| 1980 | 113 | 116 | 135 | 104 | 108 |
| 1981 | 118 | 133 | 123 | 116 | 106 |
| 1982 | 116 | 138 | 109 | 113 | 105 |
| 1983 | 129 | 161 | 113 | 133 | 106 |
| 1984 | 128 | 170 | 96 | 131 | 98 |
| 1985 | 173 | 177 | 125 | 169 | 130 |
| 19 6 | 172 | 184 | 132 | 223 | 172 |
| 1987 | 214 | 198 | 181 | 310 | 225 |
| 1988 | 219 | 213 | 187 | 327 | 216 |
| 19.9 | 262 | 258 | 205 | 350 | 277 |
| 1990 | 283 | 260 | 239 | 366 | 206 |

ஆதாரம் : கட்டுரையாளரால் கணிக்கப்பட்டது.

ரளவு நாணய மாற்று வீதத்தின் போக்கினை சுட்டெண் வாயிலாகக் காட்டுகின்றது. இச் சுட்டெண்கள் வெளிநாட்டு நாணயத்தின் ஒரு அலகுக்கு எத்தனை இலங்கை ரூபாக்கள் என்ற விதமாகத் தரப்பட்டுள்ள பெயரளவு நாணய மாற்றுவிகித தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு, 1978ம் ஆண்டை அடியாண்டாகவும் கொண்டு கணிக்கப்பட்டதாகும்.

இங்கு உயர்வான சுட்டெண் குறிப்பிடுவது யாதெனில் குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவு என்பதே யாகும். மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சுட்டெண்களின் அடிப்படையில் விசேட எடுப்புரிமைக்கெதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக 1984ம் ஆண்டுக்குப் பின்பே ரூபாவின் மதிப்பு சடுதியாக வீழ்ச்சியடைந்து செல்வதைக் காணமுடிகிறது. 1984ல் விசேட எடுப்புரிமைக்கான சுட்டெண் 128 ஆக இருந்து 1990ல் 283 ஆக அதிகரித்துள்ளது. சராசரியாக இவ்வதிகரிப்பு 120 வீதமாக உள்ளது. அதாவது விசேட எடுப்புரிமைக் கெதிராக இலங்கை ரூபாவின் நாணயம் 120 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதே காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கும், ஸ்டேர்லிங் பவுணுக்குமான இலங்கை ரூபாவின் மதிப்பிழப்பானது முறையே 53 வீதத்தையும் 149 வீதத்தையும் காட்டுகின்றது. இதேபோலவே யப்பானிய யென், டியூச் மார்க் என்பனவற்றிற்கான ரூபாவின் மதிப்பிழப்பானது முறையே 170 வீதத்தையும் 212 வீதத்தையும் காட்டுகின்றது. எனவே இலங்கை ரூபாவின் பெயரளவுப் பெறுமதியானது அட்டவணை 1ல் உள்ள நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்வதையே நாம் காணக்கூடியதாக உள்ளது.[8] இவ்வாறான வீழ்ச்சிக்கு பணவீக்கத்தினை விரைவாக அனுபவிக்கும் நாட்டின் நாணயம் பெறுமதி இழப்பதை நாம் காரணமாகக் கூறக் கூடியதாகவுள்ளது.

அட்டவணை 2ல் இலங்கையின் பெயரளவுச் செலாவணி அசைவுகள் 1984ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டுவரை காட்டப்பட்டுள்ளது. பிரதான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண் டீயூச் மார்க், யப்பானிய யென், பிரான்சிய பிராங், இந்திய ரூபாய் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் இடம்பெறுகின்றன. அட்டவணை 1 இல் காட்டப்பட்ட அந்நியச் செலாவணி சுட்டெண் போக்கினை ஒத்ததாகவே பெயரளவு அந்நியச் செலாவணி விதப் போக்கும் காணப்படுகின்றது இவ் வட்டவணையில் (2இல்) இந்திய ரூபாய் பிரான்சிய பிராங் இரண்டு மேலதிக நாணயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பெயரளவுச் செலாவணி அசைவுகளில் குறிப்பிடக் கூடிய அம்சம் என்னவெனில் 1986 ல் முன்னைய ஆண்டோடு ஒப்பிடுகின்ற போது இலங்கை ரூபா 4.3 சத வீதத்தால் பெறுமதி உயர்வடைந்து காணப்படுகின்றது அதே போன்று 1988 ம் ஆண்டில் 1987 ம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது இலங்கை ரூபா டீயூச் மார்க், பிரான்சிய பிராங், இந்திய ரூபாய் என்பவற்றிற்கெதிராக பதிப்பேற்றம் முறையே 4 34 சதவீதமும், 5.29 சதவீதமும், 10 05 சதவீதமுமாகக் காணப்படுகின்றது. இவற்றினை விட 1990ம் ஆண்டில் முன்னைய ஆண்டினைவிட இந்திய ரூபாய்க்கெதிராக இலங்கை ரூபாம் 5.69 சதவீத பெறுமதி உயர்வினைக் காட்டுகின்றது.

அட்டவணை 2

## பெயரளவு செலாவணி வீத அசைவுகள் 1984 - 1990

| நாணயம் | ஆண்டு முடிவில் செலாவணி வீதங்கள் (அலகொன்றுக்கான ரூபா) | | | | | | | முந்திய ஆண்டுக்கு மேல் சதவீத மாற்றம் (அ) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1°84 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
| ஐ. அ. டொலர் | 26.2800 | 27.4075 | 28.5200 | 30.76?5 | 33.03.5 | 40.0000 | 40.2400 | -4.87 | -4.11 | -3.90 | -7.29 | -6.87 | -17.42 | -0.60 |
| ஸ்டேலிங் பவுண் | 30.5111 | 39 5764 | 41.7961 | 57.1721 | 59.0786 | 65.0400 | 75.5908 | 17.64 | -22.91 | -5.31 | -26.89 | -3.23 | -10 09 | -13.9 |
| டியூச் மார்க் | 8.3495 | 11.1074 | 14 6727 | 19.2826 | 18.4797 | 23.7002 | 26.1514 | 9.05 | -24.83 | -24.30 | -23.91 | 4 34 | ·22.03 | -9.37 |
| யப்பானிய யென் | 0.1050 | 0.1360 | 0.1794 | 0.2491 | 0 2631 | 0.2816 | 0.2943 | 2.04 | -22.?1 | -24.18 | -27.99 | -5.32 | -9.57 | -4.32 |
| பிரான்சிய பிராங் | 2.7276 | 3 6167 | 4.4337 | 5.6986 | 5.4121 | 6.9354 | 7.7125 | 9 05 | -24.58 | -18 43 | -22.13 | 5.29 | -21.96 | -10.08 |
| இந்திய ரூபாய் | 2.1192 | 2.2575 | 2.1645 | 2.4043 | 2.1848 | 2.3603 | 2.2332 | 11.04 | -6.13 | 4.30 | -9.97 | 10 05 | -7.44 | 5.69 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 25.8065 | 30.0339 | 34.7998 | 43.26?4 | 44.2820 | 52.930 | 57.2479 | 1.24 | -14.08 | -13.70 | -19.57 | -2.29 | -16.34 | -7.54 |

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டன.

கழித்தல் அடையாளம் இலங்கை ரூபாவின் தேய்வினைக் காட்டுகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

அடுத்து இலங்கையின் நிறையளிக்கப்பட்ட சுட்டெண் என்பதனை நோக்குவோம். இச் சுட்டெண் கணிப்பீட்டு முறையானது சர்வதேச நாணய நிதியத்தினால் கையாளப்பட்ட வாய்ப்பாட்டினை பயன்படுத்தி 1979ம் ஆண்டினை அடியாண்டாகக்கொண்டு கணிக்கப்பட்டுள்ளது.[9] இச்சுட்டெண் ணானது, உள்நாட்டு நாணயத்தின் கொள்வனவுச் சக்தியின் போக்கினை அதனது வர்த்தகப் பங்காள நாட்டின் நாணயங்களுக்கு எதிர்முகமாக குறிப்பிடுவதால் இச்சுட்டெண்ணானது ஆய்வினைப் பொறுத்தும் கொள்கை வகுத்தலிலும் பயனுள்ள வழிகாட்டியாய் அமைகின்றது. வர்த்தக நிறையளித்தல் என்பது இங்கு ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் தனித்தனியாக காட்டப்பட்டுள்ளது. இந்நிறையளித்தலை கீழேயுள்ள அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை: 3**

**ஏற்றுமதி இறக்குமதி நிறைகள்**

| நாடு | மொத்த ஏற்றுமதி பெறுமானத்தின் பங்கு 1979 | சரி செய்யப்பட்டது | மொத்த இறக்குமதி பெறுமானத்தின் பங்கு 1979 | சரி செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. அவுஸ்ரேலியா | 0·0150 | 0·0284 | 0·0478 | 0·0655 |
| 2. கனடா | 0·0148 | 0·0281 | 0·0129 | 0·0177 |
| 3. ஜேர்மன் | 0·0592 | 0·1122 | 0·0542 | 0·0743 |
| 4. பிரான்ஸ் | 0·0166 | 0·0315 | 0·0214 | 0·0293 |
| 5. ஹொங்கொங் | 0·0105 | 0·0199 | 0·0229 | 0·0314 |
| 6. இந்தியா | 0·0131 | 0·0248 | 0·1035 | 0·1419 |
| 7. இத்தாலி | 0·0280 | 0·0531 | 0·0117 | 0·0164 |
| 8. யப்பான் | 0·0682 | 0·1293 | 0·1332 | 0·1826 |
| 9. மலேசியா | 0·0004 | 0·0002 | 0·0062 | 0·0085 |
| 10. நெதர்லாந்து | 0·0318 | 0·0603 | 0·0211 | 0·0289 |
| 11. பாகிஸ்தான் | 0·0449 | 0·0851 | 0·0219 | 0·0300 |
| 12. சவூதி அரேபியா | 0·0294 | 0·0557 | 0·0696 | 0·0954 |
| 13. சிங்கப்பூர் | 0·0105 | 0·0199 | 0·0602 | 0·0825 |
| 14. ஐக்கிய இராச்சியம் | 0·0813 | 0·1541 | 0·0893 | 0·1224 |
| 15. ஐக்கிய அமெரிக்கா | 0·1039 | 0·1970 | 0·0537 | 0·0736 |

மூலம்: பொருளாதார மீளாய்வு 1979 (அட்டவணை 77) இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: சரி செய்யப்பட்ட நிறையானது $\frac{W_i}{\sum_{i=1}^{n-1} W_i}$ என்பதால் தரப்பட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி பங்காள நாடுகளாக அவுஸ்ரேலியா, கனடா, ஜேர்மன், பிரான்ஸ், ஹொங்ஹொங், இந்தியா, இத்தாலி, யப்பான், மலேசியா, நெதர்லாந்து, பாகிஸ்தான், சவுதி அரேபியா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது [10]

**அட்டவணை 4**

**நிறையளித்த பெயரளவுச் சுட்டெண்**

| | ஏற்றுமதிக்கான நிறையளித்த பெயரளவுச் சுட்டெண் | இறக்குமதிக்கான நிறையளித்த பெயரளவுச் சுட்டெண் |
|---|---|---|
| 1978 | 100 | 100 |
| 1979 | 90 | 97 |
| 1980 | 98 | 114 |
| 1981 | 119 | 121 |
| 1982 | 112 | 116 |
| 1983 | 126 | 138 |
| 1984 | 122 | 124 |
| 1985 | 140 | 145 |
| 1986 | 158 | 183 |
| 1987 | 195 | 195 |
| 1988 | 202 | 203 |
| 1989 | 235 | 234 |
| 1990 | 277 | 245 |

ஆதாரம் : கட்டுரையாளரினால் கணிப்பிடப்பட்டது.

நிறையளித்த பெயரளவுச் சுட்டெண் பெறுமானம் அதிகமானதாகக் காணப்படுகின்றதெனின் அது இலங்கைக்கான ஏற்றுமதி இறக்குமதிகளின் பாதக நிலைமையினைக் காட்டுகிறது. மாறாக நிறையளித்த பெயரளவுச் சுட்டெண் ணானது குறைவானதாக இருக்கின்ற போது ஏற்றுமதி இறக்குமதி என்பன இலங்கைக்குச் சாதகமாக அமையும். இவ்விளக்கத்தினைக் கொண்டு மேலேயுள்ள அட்டவணையைப் பார்க்கின்றபோது

ஏற்றுமதி நிறையளித்த பெயரளவுச் சுட்டெண் 1979, 1980 ஆகிய ஆண்டுகளில் குறைந்து செல்கின்றது. இது இலங்கைக்கு ஏற்றுமதி குறித்து நன்மை பயப்பதாகவும், இவ்வாறான தன்மை யப்பானிய யென்னுக்கெதிராக இலங்கை ரூபா பெறுமதி ஏற்றத்தினையும் காரணமாகக் காட்டமுடியும். அதேபோன்று முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 1982, 1984ம் ஆண்டுகளின் சுட்டெண்கள் குறைவடைந்துள்ளமை ஏற்றுமதிக்கான சாதக நிலைமையை விளக்குவதாகவுள்ளது. அடுத்து இறக்குமதிக்கான நிறையளித்த பெயரளவுச் சுட்டெண்ணைப் பார்க்கின்றபோது 1984 ம் ஆண்டுககுப்பின் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளது.

1984க்கு மற்பட்ட ஆண்டுகளில் 1979, 1980 ஆண்டுகளிலும் 1982, 1984 அண்டுகளிலும் குறைவாக உள்ளது. இது இறக்குமதியை பொறுத்து இவ்வாண்டுகளில் இலங்கைக்குச் சாதகமாகவுள்ள நிலைமையே குறிப்பிடுகின்றது.

### III

வர்த்த நிறையளிக்கப்பட்ட சுட்டெண் கணிப்பீட்டு முறையானது ஏற்றுமதி இறக்குமதிக்கான கொடுப்பனவுகள் யாவும் உள்நாட்டு நாணய வாயிலாக நடைபெறுகின்றது. என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் நடைமுறையில் இறக்குமதிக்கான கொடுப்பனவுகள், ஏற்றுமதிக்கான பெறுகைகள் அமெரிக்க டொலரைப் பயன்படுத்தி நடைபெறுகின்றன. இவ்வாறான நாணய பரிமாற்றங்களை வர்த்தக நிறையளித்த சுட்டெண் கவனத்தில் எடுக்கவில்லை. எனவே வர்த்தமாதிரியை விடுத்து பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் சேர்க்கையைக் கவனத்தில் கொண்ட நிறையளித்த சுட்டெண் கணிப்பீடு பயனுள்ளதாக அமையும். மேலும் வர்த்தகப் பங்காள நாடுகளின் விலைச் சுட்டெண்கள் பற்றிய தரவுகள் கிடைக்குமிடத்து அவற்றிற்கான நிறையளித்த சராசரிச் சுட்டெண்ணைக் கணிப்பிட்டு இலங்கையின் விலைச்சுட்டெண்ணின் விகிதமாக பெயரளவு நிறையளித்த சுட்டெண்ணை பிரிக்க நிறையளித்த மெய் சுட்டெண் பெறப்படலாம். நிறையளித்த மெய் சுட்டெண்ணை செயற்திறன் வாய்ந்த ஏற்றுமதி இறக்குமதி விகிதங்களை பயன்படுத்தி பயனுறுதி மாற்று வீதம் கணிக்கப்படலாம்.

### குறிப்புகள்


1. Bird Graham, World Finance and Development, 1985, chapter 10, p 2:3.
2. Stern J Joseph, Mallon D Richard and Hutcheson L Thomas, Foreign Exchange Regimes and Industrial Growth in Bangladeshi, World Development Vol. 16 No. 12 December 1988 p 1438.
3. Ibid p 1423
4. Idib p 1438
5. Wood A Global Trends in Real Exchange Rates· 1960 - 84, World Develoment, Vol. 19 No. 4 April 1991 p 332.